DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.271/2025

PW - 4

| | | |
|---|---|---|
| Name | : | மனோகரன் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 24.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2025ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

கடந்த 17.02.2025ம் தேதி எனது தலைமையில் தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் காலை 08.45 மணியளவில் பேளுக்குறிச்சி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மலைவேப்பங்குட்டை சந்திரசேகர் என்பவரது தோட்டத்தில் கண்காணித்தபோது சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் பச்சைநிற பிளாஸ்டிக்குடத்துடன் நின்று கொண்டிருந்தார். அவர்தான் ஆஜர் எதிரி **(**சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.**)**

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் மணிகண்டன் த.பெ.சுப்ரமணியன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் பச்சைநிற பிளாஸ்டிக்குடத்தில் கள்

இருப்பதாகவும் கூறினார். ஆஜர் எதிரி மணிகண்டன் தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள பச்சைநிற பிளாஸ்டிக்குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்தது. அதனால் காலை 09.00 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி மணிகண்டனை கைது செய்தேன். பின்னர் எதிரி மணிகண்டனை விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி மணிகண்டனை தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறினார்.

பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள பச்சைநிற பிளாஸ்டிக்குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்தார். அதனை தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழித்தேன்.

எதிரியை அவர் வைத்திருந்த கள்ளுடன் அந்த இடத்தில் எனது செல்போனில் தலைமை காவலர் திரு.பாஸ்கர் புகைப்படம் எடுத்தார் பின்னர் எதிரி அவர் வைத்திருந்த கள்ளை கீழே ஊற்றி அழிக்கும்போது புகைப்படம் எடுக்கப்பட்டது. **(**புகைப்படம் அ**.**சா**.**ஆ**.5** ஆகவும்**, BSA** பிரிவு **63(4)(c)-**ன் கீழான சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.45/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன்.

பின்னர் அன்றைய தினமே நானும் தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோரும் சம்பவ இடம் சென்றோம். 13.00 மணிக்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி

வரைபடம் அ.சா.ஆ.**8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)**

பின்னர் தலைமை காவலர் திரு.செல்வம், முதல்நிலை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் பூபதி மற்றும் முருகேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி சம்பவ இடமானது யாருக்கு சொந்தமான இடம் என்று விசாரணையில் தெரிந்து கொண்டோமா என்றால் சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமான இடம் என்று தெரிந்துகொண்டோம். மேற்படி சந்திரசேகரன் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சந்திரசேகரன் என்பவருக்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன உறவு என்று நான் எனது விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி சந்திரசேகரன் என்பவர் என்னிடம் அவருக்கு சொந்தமான நிலத்தில் ஆஜர் எதிரியோ அல்லது வேறு நபரோ கள் இறக்குகிறார்கள் என்று தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் கள்ளை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளின் மாதிரியை கைப்பற்றப்பட்ட பொருள் கள்தானா என்று நிரூபிக்கும் பொருட்டு ஆய்விற்காக எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி கள்ளை விற்றார் என்பதை நிரூபிக்கும் பொருட்டு தனிநபர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்தவழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**